மங்களகரமான நிகழ்ச்சிகளை நினைவெனத் தங்கிட வீடியோ படம்பிடித்திட

அஜந்தா வீடியோ

63, சங்கிலியன் வீதி, (முத்திரைச் சந்தையடி) நல்லூர்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

எழிலுறு காட்சிகளுடன் அழகுறப் படம் பிடித்திட விஜயம் செய்யுங்கள்

அஜந்தா போட்டோ

63, சங்கிலியன் வீதி, (முத்திரைச் சந்தையடி) நல்லூர்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 27 திங்கட்கிழமை (12 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 289

# கடல்வலயத் தடைச் சட்டத்தினை நீக்குவது குறித்து அரசு பரிசீலனை

## புனர்வாழ்வு அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு

கொழும்பு, செப்டெம்பர் 12

வடக்கு – கிழக்கில் இப்போது நடைமுறையில் இருந்து வரும் கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக அறியவருகிறது.

தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலையை உருவாக்கும் பணிக்கு கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து –

பிரதமர் சந்திரிகா இது சம்பந்தமாக தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சிடம் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இப்போது புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகள் கடல் வலயச் சட்டத்தை நீக்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளின் கருத்தை அறிவதில் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரியான திரு. புத்தி ஸ்ரீவர்த்தனா இது விடயமாக இப்போது தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வருட முற்பகுதியில் கடல் வலயத் தடைச் சட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா விமானப்படைக்கு 3 ரஷ்ய எம். ஐ. ஹெலிகள்

மூன்று எம்.ஐ. 17 ரக ரஷ்ய ஹெலிக்கொப்டர்களை விரைவில் இலங்கை விமானப்படை பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மூன்று ஹெலிக்கொப்டர்களையும் கொள்வனவு செய்வது என்று முந்திய அரசாங்கம் சில காலத்துக்கு முன்னரே தீர்மானித்திருந்தது.

இந்த ஹெலிக்கொப்டர்கள் இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட ரஷ்ய ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களைக் கைப்பற்ற விசேட பொலீஸ் குழுக்கள்

### தலைநகரில் தீவிர நடவடிக்கை

கொழும்பு, செப். 12

சட்டவிரோத ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களை முற்றுகையிட்டு அவற்றைக் கைப்பற்ற கொழும்பு மாநகரில் மட்டும் இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் நான்கு விசேட பொலீஸ் குழுக்கள் 24 மணி நேரமும் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஐ. ரி. கனகரத்னம் தலைமையில் இத் தேடுதல் வேட்டை நடத்தப்படுகிறது.

ஓர் இரவில் மட்டும் நான்கு இடங்கள் முற்றுகையிடப்பட்டன. இதுவரை நான்கு ரிப்பீட்டர் ஷொட் கண்கள் 2 கைவிசைத் துப்பாக்கிகள் 19 ஷொட்கண்கள் மற்றும் நாட்டுத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்ததாக ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-எ)

## ஆனையிறவு வீதி திறந்தாலும் படை எடுக்க மாட்டோம்

### இராணுவத் தளபதி ஆயருக்கு உறுதி

கொழும்பு, செப். 12

ஆனையிறவுப் பாதையை பொது மக்களின் போக்குவரத்துக்காகத் திறக்கும் பட்சத்தில் –

இராணுவத்தினர் குடாநாட்டின் மீது படையெடுப்பு எதனையும் அவ்வழியே மேற்கொள்ள மாட்டார்கள் என்று –

தாம் உத்தரவாதம் அளிக்க முடியும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகத்துக்கு உறுதியளித்துள்ளார்.

இலங்கை விஜயம் தொடர்பான முன்னேற்பாடுகளை செய்வதற்காக வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினர் அண்மையில் இராணுவ மற்றும் பொலீஸ் உயரதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ் ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார். இது தொடர்பான செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.

பாப்பரசரைத் தரிசிக்க வரும் வடபகுதி மக்களின்

பரிசுத்த பாப்பரசரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆயிரம் ஈழ அகதிகள் விரைவில் நாடு திரும்புவர்

கொழும்பு, செப். 12

தமிழகத்தில் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 10 ஆயிரம் பேர் இம்மாதம் 20 ஆம் திகதியில் இருந்து படிப்படியாக தாயகம் திரும்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை –

தமிழகத்திலுள்ள வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் அகதிகள் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## வட. – கிழக்கு ஆளுநர் யார்? ஓரிரு தினங்களில் தெரியும்

வடக்கு – கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் யார் என்பது அடுத்த ஓரிரு தினங்களுக்குள் முடிவு செய்யப்படும்.

இது தொடர்பான சிபாரிசை பிரதமர் சந்திரிகா ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார் என்று அமைச்சர் தேனக ரத்வத்த செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ-எ)

## யாழ். அரச அதிபரின் லண்டன் விஜயம் ரத்து?

யாழ்ப்பாணம், செப். 12

லண்டனில் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஈழத் தமிழரின் கலாசாரப் பாதிப்பு தொடர்பான மாநாட்டில் யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கலந்து கொள்ளமாட்டார் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறக்கூடிய பூர்வாங்கப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வசதியாக கொழும்பில் தங்கியிருக்குமாறு அரசு திரு. மாணிக்கவாசகரைக் கேட்டிருப்பதை அடுத்தே, அவர் தனது லண்டன் விஜயத்தை நிறுத்திக்கொண்டார் எனத் தெரியவருகிறது.

லண்டனில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து பங்குபற்றும் பிரதிநிதிகள் குழு நேற்றுப் புறப்பட இருந்ததாகவும் அறியவந்தது. (ஐ-3)

## சந்திரசேகரன் வழக்கில் ஒக்ரோபர் 7 இல் தீர்ப்பு

கொழும்பு, செப். 12

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தற்போது பிரதி அமைச்சராக இருப்பவருமான திரு. பெ. சந்திரசேகரன் மீது தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கை விசாரித்து வந்த பாணந்துறை மேல் நீதிபதி ரி. பி. வீரசூரியா இதனை கடந்த வியாழக்கிழமை அறிவித்தார்.

இவ் வழக்குத் தொடர்பாக எழுத்துமூலமான தொகுப்புரையை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் கோரி சிரேஷ்ட அரச சட்டத்தரணி கோமித தர்மவர்த்தன சமர்ப்பித்த மனுவையும் நீதிபதி நிராகரித்தார். இனியும் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்த நீதிபதி, வழக்கு மீதான தீர்ப்பு ஒக்டோபர் 7ஆம் திகதி வழங்கப்படும் என்றார்.

1991ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் திகதிக்கும் ஜூலை 4 ஆம் திகதிக்கும் இடையில் கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகக் குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் பாதுகாப்புக்கு புதிய டி. ஐ.ஜி

கொழும்பு, செப். 12

பிரதமரின் பாதுகாப்பு பிரிவுக்கு பிரதிப்பொலீஸ் மா அதிபராக திரு. காமினி குணவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1990 இல் இவர் பொலிஸ் சேவையில் இருந்து விலக்கப்பட்டார். இப்போது மீண்டும் பொலீஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். (எ)

# இ. தொ. கா. அரசை ஆதரிக்கும்; தொண்டாவுக்கு அமைச்சர் பதவி?

கொழும்பு, செப். 12

சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிப்பது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

அட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இ. தொ. காவின் தேசிய மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை –

இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான், பிரதமர் சந்திரிகாவை வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேசியதாகவும் –

உடன்பாடு ஒன்றுக்கு வருவது குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது விடயமாக தற்போதைய அரசாங்கத்தின் இரு பிரதி அமைச்சர்கள் தூது சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் பதவி

திரு தொண்டமான் பொ. ஐ. மு. அரசுடன் இணையும் பட்சத்தில் அவருக்கு புடவைக் கைத்தொழில் அமைச்சை வழங்குவதற்கு பிரதமர் சந்திரிகா தயாராக இருப்பதாக தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையைத் தங்களுக்கு ஏற்படுத்தியிருப்பதாகத் தொண்டமான் அட்டன் மாநாட்டில் பேசும் போது தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முக்கிய நோக்கம் அரசியல் கட்சியாக செயற்படுவதல்ல, சமூகத்தின் நலனே அதன் முக்கிய நோக்கமாகும் – என்றும் அவர் கூறினார்.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினை குறித்து அக்கறை காண்பிக்கும் ஓர் அரசியல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பதினேழு வருஷமா அமைச்சர் ஆசனத்தில் இருந்தவரெல்லோ, இப்ப எம். பியாக இருக்க என்னென்டு மனம் வரும் பாருமேன்……?

## பூநகரிப் பாதையைத் திருத்த மதிப்பீட்டு வேலை ஆரம்பம்

கொழும்பு, செப். 12

கேரதீவு – சங்குப்பிட்டிப் பாதை திருத்துவது சம்பந்தமான மதிப்பீடுகள் இப்போது துரிதமாக நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி ஒருவரிடம் இதற்கான பொறுப்பு குறித்தொதுக்கப்பட்டதாகவும், அவர் பிரஸ்தாப பாதையை சீரமைப்பது சம்பந்தமான புள்ளி விபரங்களை தொடர்புடைய அதிகாரிகளிடம் சேகரித்து வருவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கேரதீவு – சங்குப்பிட்டி (பூநகரி) பாதையைத் திறந்து விடுவதற்கு உகந்ததாக அதனைத் திருத்துவது சம்பந்தமான அறிக்கையை விரைவாகச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் சந்திரிகா குறிப்பிட்ட அதிகாரியைக் கேட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் நாளாந்தம் ஆகக் குறைந்தது நூறு லொறிகளில் உணவுப் பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு வரமுடியும் என மதிப்பிடப்படுகிறது.

இந்தப் பாதை திறக்கப்படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வட – கிழக்கு நிலைமையை பாதுகாப்பு குழு ஆராய்வு

கொழும்பு, செப். 12

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு கடந்த வாரம் வடக்கு – கிழக்கின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி ஆராய்ந்தது.

தென்பகுதியின் பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடிதப் பரிமாற்றம் இடம்பெற்று வருவதால், வடக்கு – கிழக்கு யுத்தம் தொடர்பான தந்திரோபாயங்களில் மாற்றம் செய்வது குறித்து இம் மாநாட்டில் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை என்று, பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

## பிரதமர் வேட்டைச் சென்ற சமயம் வளலாய் பகுதியில் கைதான மூவரும் நேற்று விடுவிப்பு

வடமராட்சி, செப். 12

கடந்த வெள்ளியன்று வளலாய்ப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற வேளை படையினரிடம் பிடிபட்ட மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வளலாயில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலிப் பகுதியில் வசித்துவந்த சுப்பிரமணியம் கமலநாதன் (வயது 42), பெரியதம்பி முருகமூர்த்தி (வயது 38), மார்க்கண்டு சின்னத்தம்பி (வயது 51) ஆகிய மூவருமே நேற்றுப் படையினரால் விடுவிக்கப்பட்டு காங்கேசன்துறையில் இருந்து "தரோமா" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

வளலாய்ப் பகுதி காவலரணில் இருந்த படையினர் எம்மைப் பிடித்தனர். பின்னர் அவர்கள் எம்மைத் தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலையில் இருந்தும் இருவர் விடுவிப்பு

வடமராட்சி, செப். 12

இளவாலைப் பகுதியில் படையினரின் பிடியில் சிக்கியிருந்த இருவர் நேற்று அங்கிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இளவாலை சித்திர மேழியைச் சேர்ந்த செல்லையா திருஞான ஈஸ்வரன் (வயது 33) என்பவரும், பெரிய கோவிலை வசிப்பிடமாகக் கொண்ட இராசநாயகம் றொபட்நிக்சோ (வயது 15) என்ற மாணவனுமே விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் காங்கேசன்துறையில் இருந்து தரோமா கப்பல் மூலம் நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர். (ஈ-173)

## ராணுவம் சுற்றிவளைத்து நிற்க இளவாலையில் வாக்களிப்பு

### நேற்று விடுவிக்கப்பட்ட மாணவர் தகவல்

வடமராட்சி, செப். 12

"இளவாலை செ ஹென்றீஸ் கல்லூரியில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டு வாக்களிப்பு நடந்தவேளை இராணுவத்தினர் அப் பகுதியைச் சுற்றி வளைத்து நின்றனர். அங்கு வாக்களிப்பு சொற்ப நேரமே இடம்பெற்றது. அப்பகுதியில் உள்ள சுமார் 150 பேரில் பலர் வாக்களிக்கவில்லை"

இளவாலைப் பகுதியில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்ட இராசநாயகம் றொபட்நிக்சோ என்ற மாணவர் இவ்வாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து உதயன் செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது:-

எனது பெற்றோர்கள் மாவிட்டபுரத்தில் இருக்கிறார்கள்.

நான் இளவாலை ஹென்றி அரசர் தேவாலயத்தில் பங்குத் தந்தையுடன் இருந்து கல்வி கற்றுவந்தேன்.

இராணுவம் அங்கு வந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து என்னால் வர முடியாமல் போய்விட்டது.

அங்கு தேவாலயம், கல்லூரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மாவட்ட தேர்தலை ஆட்சேபித்து மனு தாக்கல்

கொழும்பு, செப். 12

வன்னி மாவட்ட பொதுத் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. எஸ். நோபர்ட் ஞானப்பிரகாசநாதன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்சேப மனு வைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி, சட்டமா அதிபர், மன்னார் அரச அதிபர் மற்றும் இம் மாவட்டத்தில் இருந்து தெரிவான ஆறு எம். பிக்களும் காட்டப்பட்டுள்ளனர்.

மனுவில் கூறப்பட்டிருப்பதாவது;

நாடாளுமன்றத் தேர்தல் விதி முறைகளுக்கு அமைய இம்மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படவில்லை. பொதுவான அச்சுறுத்தல்கள் அங்கு இருந்தன. அவை தேர்தல் முடிவுகளை பாதித்துள்ளன.

வவுனியாக் கச்சேரியில் வைத்து வாக்குப்பெட்டிகள் திறக்கப்பட்ட போது நான்கு பெட்டிகளின் சாவிகள் காணாமற் போயிருந்தன. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி வாக்காளர்களுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் புத்தம் புதிய இரு மாட்டு வண்டிகள் விற்பனைக்கு உண்டு. ஒன்று பெட்டி வண்டி, ஒன்று தட்டி வண்டி. 17'' ரயர் உள்ளவை. நேரில் பார்வையிடவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலுமகன் காப் செயர், கன்னாகம். (7632)

பத்து நாட்கள் வளர்ச்சி அடைந்த Prima (பிறிமா) புறொயிலர் இறைச்சிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிவம் லேன், உடுவில். (32806)

முட்டையிடும் சிவ்லி, பொலிஸ், லாபடிக்கிசல், பன்டம், பிறில், பாமாஸ் கோழிகள் சோடியாக விற்பனைக்குண்டு. "ஈஸ்வரி இல்லம்", மேஜர் செல்வராசா வீதி, மடத்தடி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. (32828)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில்கிழக்கு, நாமகள் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர்தேவையில்லை. தொடர்பு: ந. அருணாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (32821)

## மணிக்கூடுகள்

உங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் உதிரிப் பாகத்திற்காக விற்று நீங்கள் விரும்பும் நல்ல நிலையில் உள்ள வேறு மணிக்கூடுகள் மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம்; டிக்கா வரக் ஆன் றேடியோ வேக்ஸ், சூரியகுளம் சந்தி (வாசனிக் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9042)

## தவறிவிட்டது

அகதி முகாம் தேவைக்கு பயன்படுத்தவென கொண்டு செல்லப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் சந்தானைப் பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் தீவக மக்கள் நலன்காக்கும் கழகம், இல. 651, புதிய வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்; (32823)

தையல்நாயகி சின்னையாவின் அடையாள அட்டை, பென்சன் கார்ட் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய சிவப்பு கவர் 2-9-94 அன்று பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அவற்றில் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்; (32837)

## உயர்தரக் கணக்கியல்

ஆக்கம் வி. சுந்தரேசன். அரச வரவு செலவுத்திட்டம் வே. சண்முகராஜா BBA. விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி 9153]

## கல்வியியல்

உளவியலும் நவீன கற்பித்தலும் கலை இலக்கியக் கோட்பாடுகள் கல்வி உளவியல் கருத்துக்களும். ஆக்கம்; கலாநிதி சபா. ஜெயராஜா. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-9153)

## தப்பியோடிய சிப்பாய் கைது

கொழும்பு, செப். 12

திருகோணமலை கெமுனு இராணுவ முகாமைச்சேர்ந்த சிப்பாய் ஒருவரை களவுபோன பொருள்களுடன் காலிப்பொலிஸார் கடந்த வாரம் கைது செய்தனர்;

அண்மையில் இவர் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. (எ)

# MATHS CENTRE
NELLIADY

## A/L 94

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள்,

✻ பௌதீகவியல் — திரு சோதிலிங்கம்
16 — 09 — 94 வெள்ளி பி. ப 4-00

✻ இரசாயனவியல் — திரு. மணியம்
19 — 09 — 94 திங்கள் பி. ப. 1-00

✻ தூயகணிதம்
✻ பிரயோககணிதம் — திரு. அருளானந்தம்
18 — 09 — 94 ஞாயிறு காலை 7-30

(இ/9097)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ பவ ஆண்டு ஆவணி 29ஆம் நாள் (14 - 09 - 1994) புதன்கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் 3-00 மணி வரை வரும்
★ தனுசு லக்கின அமிர்தயோக சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| திருமதி பொ. சிவலிங்கம் அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **சுந்தரலிங்கம்** (Lingam Mills) அவர்களுக்கும் | திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி **கலைவாணி** B. A. அவர்களுக்கும் |

நல்லூர் சிவன் கோயிலில் திருமணம் நிகழ்த்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✻ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்; ✻

திருமதி பொ. சிவலிங்கம், 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சுப்பிரமணியம், 529, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு.

[328338]

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஆவணி 29ஆம் நாள் (14 - 09 - 1994 புதன் காலை 9 05 மணி முதல் 10 15 மணி வரையுள்ள நல்வேளையில்,

| | |
|---|---|
| எமது திருநிறை செல்வன **மகாராசன்** அவர்களுக்கும் | எமது திருநிறை செல்வி **சாந்தினி** அவர்களுக்கும் |

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வள்ளி தெய்வானை கலியாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்து மதிய உணவு விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் நல்வரவை நாடும் ★

திரு. ந. நாகராசா (தலைவர்), திரு திருமதி ந முத்துக்கிருஷ்ணன். (புளியங்கூடல் வர்த்தக நிறுவனம்), 633, அருந்தவசத்த வீதி, கொழும்பு - 15

திரு. திருமதி ஐ. தனபாலசிங்கம், (சந்தக் கோட்டம் இந்துக் கல்லூரி ஒழுங்கை, பண்டத்தரிப்பு). 702, புளுமண்டால் வீதி, கொழும்பு - 15

இரு குடும்ப அழைப்பு

[328339]

# கண்ணீர் அஞ்சலி

பிரபல சிற்பக்கலைஞர், இளைப்பாறிய சித்திர வித்தியாதிபதி கலாகேசரி

## ஆறுமுகம் தம்பித்துரை

அவர்களின்

இழப்பு தமிழுலகுக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சிற்பக்கலையை ஒளிவீசச் செய்தவரும், சிற்பசாஸ்திர பட்டதாரியும், சிற்ப சாஸ்திர ஆலோசகருமான அன்னாரின் மறைவு குறித்து எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்!

அகில இலங்கை விஸ்வகர்ம சங்கம் யாழ்ப்பாணம்,
காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை,
காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்
நீர்வேலி

[சி-9103]

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சித்திரத் தேரை 1978இல் உருவாக்கிய சிற்பாசாரியாரும் மேற்படி தேவஸ்தான கௌரவ சிற்பாசாரியாரும், சிறந்த சித்திரக் கலைஞரும், குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவருமாக விளங்கிய

## கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின்

மறைவை ஒட்டி எமதுதேவஸ்தானம் இதயபூர்வமான

## கண்ணீர் அஞ்சலி

செலுத்தி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை ஆற்றி நிற்கிறது என்பதை துயரத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்.
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(32833)

# 31ஆம் நாள் அந்தியேட்டி அறிவித்தலும் நினைவஞ்சலியும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 — 01 — 1917 | 13 — 08 — 1994 |

## அமரர் முத்துத்தம்பி இராசரத்தினம்

(இளைப்பாறிய DOA நீர்ப்பாசன திணைக்களம்/ மகாவலித்திட்டம்)

சந்தை வீதி உடுப்பிட்டியில் பிறந்து, அன்டர்சன் அடுக்குமாடி, கொழும்பு-5 வதிவிடத்தில் காலமான இராசரத்தினம் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 12-09-94 கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நாங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் அன்பு என்றும் எம்மை விட்டகலாது. இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய சகோதரர்களாகிய நாம் பிரார்த்திக்கின்றோம்.

இராசசேகரம் (இளைப்பாறிய P.H.I.)
இராசநாயகம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)
இராசலிங்கம் (இளைப்பாறிய O.A (I) கட்டட திணைக்களம்)

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(7633)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 21 — 03 — 1978 | 12 — 09 — 1993 |

## செல்வன் இலங்கேஸ்வரன் மோகன்ராஜ்

முத்தான எம் செல்வா மோகன்ராஜ் - கடவுளின் சொத்தாகி எமைவிட்டு போனையோ.

பித்தாகி நாங்கள் விடும் கண்ணீர் — உன் சாந்திக்கு காணிக்கையாக்கும் கண்ணீர்.

பல்லாண்டு வாழவேண்டுமென்று நாமிருக்க—நீ போய் ஓராண்டும் ஆனதுவோ — எவ்வாண்டு சென்றாலும் உன் நினைவு எமை விட்டகலாது நம்பு

அப்பா, அம்மா.
சகோதர, சகோதரிகள்

(7903)

# முதலாம் ஆண்டு நினைவு

| தோற்றம்: | சிவபதம்: |
|---|---|
| 15—03—1943 | 24-08-1993 |

## திருமதி தாஸ் குணபூஷணம்
(இரஞ்சிதம்)

திதி: பூர்வபக்க விசாகம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் — வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

தங்களின் ஆத்மா சாந்தியடைய துதிக்கின்றோம்.
கணவன், பிள்ளைகள்.
உறவினர்.

பொற்பதி வீதி,
கோண்டாவில்.

(32886)

# 9ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 29 — 06 — 1911 | 04 — 09 — 1994 |

## அமரர் M. S. பீற்றர்

(அச்சக முகாமையாளர் - 61, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)

04 - 09 - 1994இல் காலமாகிய எமது அன்புத் தந்தையின் மரணச்சடங்கில் பங்கு பற்றி ஆன்ம, சரீர, உடல் உதவிகள் புரிந்த குருமார், கன்னியர்கள், குருமட மாணவர்கள், H F.C. ஆசிரியர்கள், மாணவிகள், பல்கலைக்கழக மாணவ, மாணவிகள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று 12-09-1994இல் யாழ். அடைக்கல நாயகி ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் காலைவேளைக்கு நடைபெறும் இரங்கற் பூசையில் கலந்து ஜெபிக்குமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

திருமதி அக்னஸ் மோகனதாஸ்
(திருக்குடும்ப கன்னியர்மடம் - யாழ்ப்பாணம்),
திரு. சின்கிலேயர் பீற்றர்
(விவசாய இலாகா - மன்னார்),
திருமதி அஞ்சலீனா அமிர்தநாயகம்
(தெஹிவளை).

61, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

[32832]

# நெஞ்சைவிட்டு நீங்கா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
(12 — 09 — 1994)



## அமரர் சுந்தரம்பிள்ளை சிவராசா

(முன்னாள் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை கூட்டுறவுப் பரிசோதகர்)

அன்பைச் சொரிந்து அறிவை வழிகாட்டிய
அப்பா நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று ஆனதா
இல்லை இன்றுபோல மனம் துடிக்கிறது
வெற்றிடத்தில் மீண்டும் உங்களையே நிறுத்தி -
நினைக்கின்றோம்
கண்ணை தேடுது அப்பா..... உங்கள் -
கருணை முகம் எங்கே என்று!
ஆண்டுகள் ஓடும் மறையும் - என்றும்
அழியாது இருப்பீர்கள் விழிநீரால் உங்கள் -
கலையாத
நினைவுகளை மீட்டுகின்றோம்
ஊர் சிறக்க ஊரார் மகிழ தொண்டுபல ஆற்றிய
கர்மவீரரே
கூட்டுறவு பண்டகசாலை, வாசிகசாலை,
கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் கோயில்
சாலிநடை வளர்ப்போர் சங்கம் ஆகியவற்றில்
முக்கிய பதவி வகித்து
உங்கள் இறுதியாத்திரைக்காக கடைசியில்
சுண்டிக்குளி துண்டி மயானசபையிலும்
தலைமை வகித்து வழிநடத்தி இருக்கையிலே
காலன் கவர்ந்து சென்றான்

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவரை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

"சிவபதி"
14/1, விதானை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[32834]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## மங்களகரமான ஆரம்பமாகட்டும்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்ற தமது விருப்பத்தை பிரதமர் சந்திரிகா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். அரசியல் தீர்வு ஒன்றுக்கு வழிசெய்யக்கூடிய பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்த வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டையும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ...

சமஷ்டி அரசமைப்பிலான

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கிளின்ரன் உதவவேண்டும்

## அமெரிக்க பத்திரிகை கோரிக்கை

கொழும்பு, செப். 12

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு எடுத்து வரும் சமாதான முயற்சியை அமெரிக்காவின் பிரபல 'வொஸ்ரன் குளோப்' பத்திரிகை வரவேற்றுள்ளது.

''மோதல்களுக்கு தீர்வு காணும் முயற்சிகள் எமக்கு ஒரு பாடத்தைப் போதித்துள்ளன. விரைந்து வரும் சமாதான வாய்ப்புகள் — அவை மறைந்து விடுவதற்கு முன்னர் — இறுகப்பற்றிக் கொண்டு விடவேண்டும்.

''சமாதான முயற்சிக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கவேண்டும். 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 94 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி இச் சமாதான முயற்சிக்கு ஆதரவளிக்க வைப்பதற்கு வாஷிங்டன் அரசு தனது பங்கைச் செய்ய வேண்டும்.

''சமஷ்டி அரசமைப்பு முறையை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெறுவதற்கு உதவும்படி ஐ.தே.க. தலைவர்களைத் தூண்டுவதற்கு கிளின்ரன் நிர்வாகம் உயர்நிலை முயற்சி எடுக்கவேண்டும்.

''இச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி கிளின்ரன் பயன்படுத்துவாரானால், யுத்தத்தைக் களைந்துள்ள இலங்கையர், அதன் அயல் நாடான இந்தியாவில் வசிப்பவர்கள் ஆகியோரின் நன்றியறிதலை அமெரிக்கா பெறமுடியும்.''

இப்படி 'வொஸ்ரன் குளோப்' பத்திரிகையின் செப்ரெம்பர் 3 இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## கொலை வழக்கில் இருந்து

# ஐ.தே.க. மந்திரியை விடுவிக்க நீதிவான் அனுமதி மறுப்பு

கொழும்பு, செப். 12

பொதுத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற அரசியல் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பான வழக்கில் ...

பொலிஸ் தரப்பு இதனை ஆட்சேபித்தது. இக்கொலை பற்றிய விசாரணை இன்னும் முடியவில்லை என்றும் பொலிஸார் கூறினர். ...

# ஜே.வி.பி. தலைவரின் மரணம் பற்றி விசாரணை நடத்துக!

## மீட்பு முன்னணி கோரிக்கை

கொழும்பு, செப். 12

ஜே.வி.பி. தலைவர்களான ரோஹண விஜேவீரா, உபதிஸ்ஸ கமநாயக்க ... (எ)

## கலாகேசரி தம்பித்துரை காலமானார்

யாழ்ப்பாணம், செப். 12

பிரபல சிற்பக் கலைஞரும், ஓய்வுபெற்ற சித்திர வித்தியாதரிசியுமாகிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை கடந்த 9ஆம் திகதி இந்தியாவில் காலமானார். இவர் அங்கு வைத்திய சிகிச்சைக்காக சென்றிருந்தார்.

ஈழத்தின் தலைசிறந்த சிற்பாசாரியான இவர் 20க்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை உருவாக்கியுள்ளார். ''யாழ்ப்பாணத்து சித்திரகவேலைப்பாடுகள்'', ''கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி'' முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் கலாகேசரி கலாமன்றத்தின் இயக்குனராகவும், குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் தலைவராகவும் பணி புரிந்துள்ளார். (க)

# மீட்பு முன்னணி எம்.பியாக நிஹால் கலப்பதி நியமனம்

கொழும்பு, செப். 12

கடந்த பொதுத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ... (எ)

## புலிகளின் குரல் வானொலியில்

12 — 09 — 1994

திங்கள் இரவு

★ 8-01 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச் சரம்
★ 8-30 செய்திகள்
★ 8-40 — தரிசனம்— விசகடி வைத்தியர் அரியாலையூர் ச. பஞ்சாட்சரம் அவர்களுடனான செவ்வி

13— 09 — 1994

செவ்வாய் காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 இன்றைய தாரகை
★ 7-30 —செய்திகள்
★ 7-35 —பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

## அரசியல் கொலை தொடர்பாக

# ஐ.தே.க. அமைச்சரின் மகனுக்கு விளக்கமறியல்

தேர்தல் காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் கொலைப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் போல்பெரேராவின் மகன் ஹரோல்ட் பெரேராவை இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி அத்தனகலை நீதிவான் அண்மையில் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இவர், கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

கையில் அடைந்துள்ளதாக கூறப்பட்ட சந்தேக நபரை செஞ்சிலுவைச் சங்க வாகனம் ஒன்றில் முன்னாள் அமைச்சர் போல் பெரேராவின் பாதுகாப்பு அதிகாரியான உதவி பொலிஸ் அதிகாரி ரஞ்சித் பெரேராவும் ஜனாதிபதி சட்டத்தரணி டன்ஸ்ரன் டி அல்விஸும் நீதிமன்றத்துக்கு கூட்டி வந்தனர். (எ-6)

# பொலீஸ் அதிகாரிகளுக்கு 110 புத்தம் புதிய கார்கள்

## முன்னாள் அரசினால் இறக்குமதி

கொழும்பு, செப். 12

பொலிஸ் உயர் அதிகாரிகளின் பாவிப்பிற்காக முந்தைய ஐ.தே.க. அரசினால் உத்தரவிடப்பட்ட 110 புத்தம் புதிய கார்களில், பிரெஞ்சுத் தயாரிப்பான பேஜோ 405 ரகத்தைச் சேர்ந்த 60 ... இவ் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேஜோ கார்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் பாவனைக்காக வழங்கப்படும். ... (எ)

## கலந்துரையாடல்

தமிழ்முத்தின் நீர்வளத்தை பேணும் பொருட்டு ... (எ)

## இராமநாதன் நினைவு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 12

... (எ)

## ராஜதந்திர சேவையில் சேராத

# தூதர்களை திருப்பி அழைக்க புதிய அரசாங்கம் முடிவு!

கொழும்பு, செப். 12

...

# பொலீஸ் திணைக்களத்தில் விரைவில் பாரிய மாற்றங்கள்

கொழும்பு, செப் 12

... (எ)

## கனடிய அரசு நிதி உதவி

கொழும்பு, செப். 12

... (எ)

## தற்போது மேற்கொள்ளப்படும்

# சமாதான முயற்சி தொடர பொறுப்புணர்வே அவசியம்

## கலாநிதி ஜயதேவ உயங்கொட

கொழும்பு, செப். 11

''தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் இடையில் முறிவடைந்து விடாதிருப்பதற்கு எல்லோரும் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்''. ...

(இ-ஜ-6)

## மருத்துவ நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், செப். 12

... (எ)

## சீனாவில் இருந்து

# 2 சக்கர ட்ராக்டர்களை தருவிக்கும் திட்டம் ரத்து

... (எ)

# போதிய வசதிகள் இருந்தால் மட்டுமே தேசிய பாடசாலை

## அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்

**விளையாட்டுக் கழகம்**

**அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு முடிவுகள்**

எமது விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுப் பரிசுக்குரியவர்களின் இலக்கங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு இலக்கம் 3385
மா. இனுாரன், யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு இலக்கம் 5353
சி. ஆனந்தி, வட்டுக்கோட்டை.

3 ஆம் பரிசு இலக்கம் 653
பெ. நிரஞ்சனாதேவி, கோண்டாவில்.

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 12030 | 3033 | 12163 | 10377 | 4658 |
| 10633 | 2274 | 11933 | 11715 | 1582 |

எதிர்வரும் 12 – 09 – 1994 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எமது செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

க. சுரேந்திரநாதன்
செயலாளர்.

(32844)


# கண்ணீர் அஞ்சலி

சன்மார்க்க சபை முன்னாள் தலைவரும், சன்மார்க்க நுண்கலை மன்றப் பணிப்பாளரும், ஓய்வுபெற்ற சித்திரபாட பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கலாகேசரி கலாலய இயக்குநருமாகிய

**கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

— சன்மார்க்கசபையினர்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
(32840)

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 13 – 10 – 1928

விண்ணில்: 12 – 09 – 1993

**அமரர் இராசதுரை மரியநாயகம்**

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பக்தியின் விளை நிலமாய்
பாரதில் எமைவளர்த்தீர்!

இன்றுமை பிரிந்துமோ
ஓராண்டு விரைந்தோடிற்று
அன்பும், பண்பும், பக்தியும்
அழியாது உலகுள்ளவரை!

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

7/3, மத்தியகிழக்கு வீதி,
குருநகர்.
(சி-9101)

தென்கொரியாவில் தங்கியுள்ள

# தபால்மா அதிபரும் அமைச்சு அதிகாரியும பதவி நீக்கம்

## புதியவர்கள் நியமனம்

தபால் மா அதிபர் டி. டி. தலநாயக்காவும் தபால் தொலைத் தொடர்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எச். ஏ. ஜயசேகராவும் பதவி நீக்கஞ் செய்யப்பட்டனர்.

பதவி நீக்க அறிவித்தல்கள் தென்கொரியாவில் நடைபெறும் சர்வதேச மாநாடு ஒன்றில் அரசுப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டுள்ள இருவருக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் இம் மாதம் 15ஆம் திகதி அளவில் கொழும்பு திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை — புதிய தபால் மா அதிபராக திருமதி சோமா கொட்டகதெனியா பதவி ஏற்றுள்ளார். அமைச்சின் உதவிச் செயலாளராக செல்வி பி. களு ஆராச்சி நியமிக்கப்பட்டார். [எ]

இ. தொ. கா. ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிக்கு நாங்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தேசிய மாநாட்டின் நிர்வாகக் குழுவின் 154 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்கும் என்று முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் தெரிவித்தார். (அ-எ-க)

வளலாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். அதன்பின்னர் எங்கள் கண்கள் கட்டப்பட்டு 'டிறக்' ஒன்றில் நாம் ஏற்றப்பட்டோம். அங்கிருந்து கொண்டு சென்ற படையினர் அறை ஒன்றினுள் எம்மை அடைத்து வைத்திருந்தனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மூவரும் தெரிவித்தனர். (ஜ-173-11)

வன்னி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கை. இவ்வாறான வாக்குகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 8 ஆயிரத்துக்கும் அதிகமாகும்.

தேர்தல் காலத்தில் இம் மாவட்டத்தில் நான்கு கொலைகள் இடம்பெற்றன. இதனால் மக்கள் மத்தியில் பீதியும் அங்கலாய்ப்பும் நிலவியது. ஆகவே இத்தேர்தல் முடிவுகளை செல்லுபடியாகாதவை என்று அறிவிக்க வேண்டும் —

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. (எ)

ஆனையிறவைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து வசதிக்காக ஆனையிறவு பாதையை திறப்பது குறித்தும் அந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

போக்குவரத்துக்காக ஆனையிறவுப் பாதையைத் திறக்கும் பட்சத்தில் இராணுவத்தினர் யாழ். குடாநாட்டின் மீது படை எடுக்கும் ஆபத்து இருப்பதாக விடுதலைப் புலிகள் கருதுவதாக ஆயர் சவுந்தரநாயகம் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா—

அவ்வாறு நாம் செய்யமாட்டோம் என உத்தரவாதம் அளிக்க முடியும் எனத் தெரிவித்தார் என்று— இலங்கை வானொலி அறிவித்தது. [ஐ-4]

# இலங்கை அணி வெற்றி

கொழும்பு, செப். 12

கொழும்பில் நடைபெற்ற நான்கு நாடுகளுக்கு இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை அணி 48 ஓவர்களில் 211 ஓட்டங்களை எடுத்தது.

கடல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டத்தை நீக்குவதென தேசிய புனர்வாழ்வு புனரமைப்புக் குழுவின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் பாதுகாப்புப்படை அதிகாரிகள் தெரிவித்த எதிர்ப்பைத் தொடர்ந்து அந்த முடிவு கைவிடப்பட்டது.

எனினும் அந்த முடிவு அமுலுக்கு வந்ததாகக் கருதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டது.

கடல் வலயத் தடைச் சட்டத்தினால் தமிழ்ப் பகுதி மீனவர்கள் ஆயிரக்கணக்கில் தமது தொழிலை இழந்து வருமானம் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்.

கடல் வலயத் தடைச் சட்டத்தின் கீழ் தலைமன்னார் முதல் திருகோணமலை வரையான பிரதேசத்தில் படகுகள் மற்றும் வள்ளங்கள் நடமாடுவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தைச் சாட்டாக வைத்தே கடற்படையினர், ஆழ்கடலுக்குச் செல்லாமல் கரைப்பகுதியில் தொழில் புரியும் தமிழ் மீனவர்களைத் தாக்குகிறார்கள். பிரங்கிக் குண்டுகள் அடித்துக் கொன்றும் வருகிறார்கள். (அ 3)

சந்திரசேகரன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியெனக் கூறப்படும் வரதனுக்கு தலவாக்கொலையில் புகலிடம் கொடுத்தாக திரு. சந்திரசேகரன் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

திரு சந்திரசேகரன் கடந்த தவணை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். [எ]

# லஞ்ச ஆணைக்குழு சட்ட நகல்

கொழும்பு, செப். 12

நிரந்தர லஞ்ச ஆணைக் குழுவை நியமிக்கும் சட்ட நகல் இம்மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நீதி, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் வெளியிட்டார். (எ-6)

# மட்டக்களப்புக்கு புதிய இராணுவ இணைப்பதிகாரி

கொழும்பு, செப். 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய இராணுவ இணைப்பதிகாரியாக பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த வியாழக்கிழமை இவர் பதவியேற்றார்.

இதுவரைகாலமும் இணைப்பதிகாரியாகப் பணியாற்றி வந்த பிரிகேடியர் ரொஹான் குணசேகரா கொழும்புக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (எ)

# நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, செப். 12

சாவகச்சேரி கல்வயல் கண்ணன் பாடசாலையில் இன்று திங்கட்கிழமையும் —

கொடிகாமம் உசன் சனசமூக நிலையம், வீனஸ் சனசமூக நிலையம் ஆகியவற்றில் நாளை செவ்வாய்க்கிழமையும் நாய்களுக்கு தடுப்பூசி போடப்படும். (க-117)

# ஆலயங்களில்

கத்தோலிக்கர்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலய நவநாள் உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

செப்ரெம்பர் 17 ஆம் திகதி மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெற்று மறுநாள் 18ஆம் திகதி காலை திருநாட்பாடற் பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை முகமாலை பங்குத் தந்தை அருட்திரு. கிரேஸின் அடிகள் நடத்துவார். (க-117)

# நவ. ச. ச. கட்சி கோரிக்கை

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி விடும்படியும்— பூநகரி பாதையை உடனடியாகத் திறக்கும்படியும் பிரதமருக்கு நவசமசமாஜக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

# புதிய தலைவர்

தேசிய சேமிப்பு வங்கியின் புதிய தலைவராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் பிரதமர் சந்திரிகாவின் பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றி வருகின்றார். (எ)

ராணுவம்......

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யைச் சுற்றி 150 பேர்வரை இன்னமும் இருக்கிறார்கள். அவர்களில் 20 பேர் மாணவர்களாவர்.

வசிக்கும் சுற்றாடலை விட்டு யாரும் வெளியே செல்லமுடியாது. அப்படிச் சென்றால் இராணுவத்தினர் தாக்குவார்கள். சுற்றாடலை விட்டு வெளியே செல்லவேண்டுமாயின் இராணுவத்தினரிடம் அனுமதி பெறவேண்டும்.

அங்கும் பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்றது. வேட்பாளர்கள் யார் என்ற விபரம் எதுவும் பொதுமக்களுக்கு தெரியாது. வாக்களிப்பில் ஒரு சிலரே கலந்துகொண்டனர். சிலரது பெயர்களுக்கு வாக்காளர் அட்டைகள் வராமையினால் அவர்கள் வாக்களிக்கவில்லை. வாக்களிப்பு நடைபெற்ற போது இராணுவத்தினர் சுற்றிவளைத்து நின்றனர். சொற்பநேரத்துக்குள் வாக்களிப்பு முடிவடைந்தது — என்றார். (ஐ-173)

பூநகரிப்......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டால், கப்பல் மூலம் பொருள்கள் கொண்டு வருவது தவிர்க்கப்படும் என்றும் —

அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே கப்பல் மூலம் கொண்டு வரப்படும் என்றும் [illegible] புனர்வாழ்வுப் [illegible] அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அறியமுடிந்துள்ளது. (அ-3)

யாழ். மாவட்டத்துக்கு

# விதை உருளைக்கிழங்கு ஒக்ரோபரில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் முற்பணம் கட்டி பதிவு செய்த விவசாயிகளுக்கே இவ் விதை உருளைக்கிழங்குகள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து இத்தகவலை யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (எ-4)

# நரோமா வந்து திரும்பியது

வடமராட்சி, செப். 12

திருமலையில் இருந்து நேற்றுக் காலை பருத்தித்துறை வந்தடைந்த நரோமா கப்பலில் 166 பயணிகள் வந்து சேர்ந்தனர். பின்னர் அந்தக் கப்பல் இங்கிருந்து 150 பயணிகளை ஏற்றிக்கொண்டு திருமலை திரும்பியது. (ஐ-178)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா சத்தியதாசன்

சபாபதி வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா சத்தியதாசன் நேற்று காலமானார்.

இவர் இராமலிங்கம் சத்தியதாசனின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், ஜோர்ஜ் (சுவிஸ்), ஜெயநேசன் (ஜேர்மனி), நிர்மலா (ஜேர்மனி), கிறிஸ்ரிகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற லயனல்தாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னலிங்கம் (ஜேர்மனி), சாரதாமணிதேவி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், சுபாஜினி, கோகுலவதனி, சிவானி, நந்தினி, நித்தியவாணி, நிசான், நிருசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நிற்றாதேவி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
ப. தெய்வேந்திரம்
(மருமகன்)

31/15 சபாபதி வீதி,
வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(32841)

## செல்லத்துரை புண்ணியமூர்த்தி

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை புண்ணியமூர்த்தி 4 - 9 - 94 இல் பிரான்சில் காலமானார்.

அவர் செல்லத்துரை உமாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், செ. பாலசிங்கம் [ஜேர்மனி], செ. கோபாலபிள்ளை, செ. நடேஸ்வரி, திருமதி கு. ஆனந்தேஸ்வரி ஆகியோரின் அன்புத் தம்பியாரும், ஜேர்மனியில் உள்ள உஷா, யசோ, நந்தினி ஆகியோரின் சித்தப்பாவும், திரு. குமாரகுலராசா [பிரான்ஸ்], திருமதி பா. நாகேஸ்வரி, திருமதி கோ. ராஜலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 11 ஆம் திகதி பிரான்சில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி உமாதேவி (தாய்)

252/11, செட்டியார் தோட்டம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(32835)

## முத்துக்குமாரு (சிவம்)

கந்தர்மடத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, கனகசபாபதி ஆகியோரின் தகப்பனும், திருமதி செல்வராணி (ஜேர்மனி), திருமதி கனகசபாபதி மாணிக்கவட்சுமி (கிராம சேவையாளர், 104 கந்தர்மடம்) ஆகியோரின் மாமனும், ஜேர்மனியில் உள்ள நந்தினி, நந்தகுமார், விமலநாதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-9-94) பி.ப. 4 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்;
கனகசபாபதி
(மாஸ்டர்)
(மகன்)

40/4, புனைவிரத கிழக்கு வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(32846)

## செ. தில்லையம்பலம் (மாசிலாமணி)

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 471/1 இரத்தின வெனியூ கே. கே. எஸ். றோட் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டவருமான செ. தில்லையம்பலம் (மாசிலாமணி) ஓய்வுபெற்ற அதிபர் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா – நாகமுத்துவின் அன்பு மகனும், கமலாட்சியம்மாவின் அன்புக்கணவரும், மணிவாசகர் [ஜேர்மனி], மணிமேகலாதேவி [கொழும்பு], காலஞ்சென்ற ஞானானந்தர் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்), சந்திரபாலர் [பொறியியலாளர் U. K.], ஜெயமணிதேவி, பரமானந்தர் [MLT கொக்குவில் அரசு மத்திய மருந்தகம்], சோமஸ்கந்தர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணம், ராஜலிங்கம், ஞானசோதி, ரதிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் —

நிவேதினா, மாலினா, ரவீந்திரநாத், ரஜனி, வக்சலா, காயத்திரி, பிரியந்தினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12-09-94 பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. பரமானந்தர்
[மகன்]

471 / 1, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.
(32845)


யாழ். நகரில் இன்று மாலை 4 மணிக்கு

யாழ்ப்பாணக் கல்லூரியின்

**பாரதி வழக்காடு மன்றம்**

09-09-1994 அன்று ஒத்திவைக்கப்பட்ட வழக்கு

**"குற்றக் கூண்டிலே பாரதியார்"**

நீதிபதிகள்:
திரு. கி. திருநந்தகுமார், திரு. க. இரகுபரன், திரு. க. குமாரதாசன்

குற்றஞ்சுமத்தி வழக்குத் தொடுப்பவர்கள்:
திரு. இ. ஜெயராஜ்
திரு. க. சிவராமலிங்கம்பிள்ளை
திரு. ஸ்ரீபிரசாந்தன்

குற்றங்களை மறுத்து எதிர்வழக்காடுவோர்:
திரு. ஏ. குமாரவேலு
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. ஜெ. கி. ஜெயசீலன்

நீதிமன்றப் பதிவாளர்: திரு. த. சிவசங்கர்

வழக்கு நடைபெறும் இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9104)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 192/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org